அசல் வழக்கு எண். 62/2023

நாள் : 20.02.2025

வா.சா. : 1

பெயர் : ஜீலைகா நாச்சியார்

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1 முதல் 3 பிரதிவாதிகள் என் சகோதரிகள் என்றால் சரி. அவர்களுக்கு பாகம் கொடுப்பதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரி.

**4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் சகோதரிகள் என்றால் சரி. 4 ம் பிரதிவாதி எங்களுக்கு தம்பி என்றாலும் கடையசியாக பிறந்தவர் என்றாலும் சரி. என் அப்பா என்ன வேலை செய்துவந்தார் என்றால் வெளிநாட்டில் ஹோட்டல் வைத்திருந்தார். என் தகப்பனார் வெளிநாட்டில் இருந்து வந்து எங்களுக்கு திருமணம் செய்து வைத்து விட்டு மீண்டும் வெளிநாடு போய்விடுவார். எனக்கு திருமணம் ஆகி சுமார் 37 வருடங்கள் ஆகிறது. எனக்கு திருமணமான பிறகு எனது சகோதரிகள் ஒவ்வொருவருக்கும் திருமணமாகிவிட்டது என்றால் சரி. நானும் என் சகோதரிகளும் திருமணத்திற்கு பிறகு எங்கள் கணவர் வீட்டில் நிரந்தரமாக தங்கிவிட்டோம் என்றால் சரி. என் தாயார் மற்றும் தகப்பனார் எங்கு தங்கியிருந்தார்கள் என்றால் என் அப்பா உடம்பு முடியவில்லை என்று வெளிநாட்டில் இருந்து வந்துவிட்டார் அதன்பிறகு என் அப்பாவும் அம்மாவும் என் அப்பா உயிருடன் இருக்கும் வரை மேலசாலையில் உள்ள வீட்டில் என் அம்மாவுடன் தங்கியிருந்தார். (அந்த வீடு 11 வது ஐட்ட சொத்தில் உள்ளதாக வாதி வழக்கறிஞர் குறிப்பிட்டார்). என் சகோதரர் 4 ம் பிரதிவாதி என் தாயார் தகப்பனாருடன் தான் இருந்தார் என்றால் சரி. அவரும் சில காலம் வெளிநாட்டில் வேலை பார்த்தார் என்றால் சரி. கடைசி

A.H. ஜலைஹாநாச்சியா.

காலத்தில் என் பெற்றோரை என் தம்பி தான் பார்த்துக்கொண்டார் என்றால் என் தங்கை 1ம் பிரதிவாதி பிஸ்மாஹூதா தான் பார்த்துக்கொண்டார். என் சகோதரி வெளியூரில் கணவர் வீட்டில் இருந்தார் என்றாலும் என் பெற்றோர் மேலச்சாலையில் இருந்தார்கள் என்றாலும் அதனால் என் தங்கை அவர்களை பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்றால் சரியல்ல. என் பெற்றோர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் தான் இருந்தார்கள். என் தாயாருக்கு மருத்துவ செலவு செய்து காப்பாற்றியது என் தம்பிதான் என்றால் சரியல்ல. தாவா 7 முதல் 10 ஐட்டம் நஞ்சை நிலங்கள் என்றும் அவை மேலச்சாலையில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா 7 முதல் 10 ஐட்ட சொத்துக்களை தவிர மேலச்சாலையில் எங்கள் குடும்பத்திற்கு வேறு சில சொத்துக்கள் இருந்தது என்றால் சரி. என் தகப்பனார் இறந்தபிறகு என் தாயார் உயிருடன் இருக்கும்போது விற்றுவிட்டார். மேற்படி சொத்தை விற்பனை செய்வது தொடர்பாக சொத்தை விற்பனை செய்வதற்கு முன்பாக மேலச்சாலை ஜமாதில் ஒரு பஞ்சாயத்து நடந்தது என்றால் சரி. என் அம்மா அந்த சொத்தை விற்று அந்த பணத்தை எங்கள் எல்லோருக்கும் கொடுத்தார். அந்த பஞ்சாயத்தில் சீர்காழியில் உள்ள சொத்தை என் தம்பிக்கு விட்டுக்கொடுப்பதாக நாங்கள் எல்லோரும் எழுதிக்கொடுத்திருக்கிறோம் என்றால் சரியல்ல. அந்த சீர்காழியில் உள்ள சொத்து தான் 1 முதல் 6 ஐட்ட சொத்தாக வழக்குரையில் காட்டியிருக்கிறோம் என்றால் சரி. அதில் மூன்று கடைகளும் ஒரு வீடும் உள்ளது என்றால் சரி. அந்த சொத்து என் தம்பியிடம் உள்ளது என்றால் நாங்களும் அங்கு போவோம் வருவோம். வீட்டு சாவி எங்களிடமும் ஒன்று உள்ளது. என் தம்பியிடமும் ஒன்று உள்ளது. இப்போது அந்த வீட்டில் யார் குடியிருக்கிறார்கள் என்றால்

யாரும் இல்லை. அந்த வீட்டை பூட்டி அதன் சாவி 4ம் பிரதிவாதி வசம் உள்ளது என்றால் வீட்டு சாவி எங்களிடமும் ஒன்று உள்ளது. என் தம்பியிடமும் ஒன்று உள்ளது. 11ம் ஐட்ட சொத்தில் உள்ள வீடு பூட்டியுள்ளது என்றால் சரி. அந்த வீட்டு சாவி யாரிடம் உள்ளது என்றால் எங்களிடமும் ஒன்று உள்ளது என் தம்பியிடமும் ஒன்று உள்ளது. நாங்களும் அந்த வீட்டிற்கு போவோம் என் தம்பியும் அந்த வீட்டிற்கு போவார். என் பெற்றோர் இறந்தபிறகு தாவா சொத்துக்கள் எதுவும் எங்கள் வசத்தில் இல்லை என்றால் சரியல்ல. எல்லோரும் ஒற்றுமையாகத்தான் இருந்தோம். அதனால் நாங்கள் அந்த சொத்தை அனுபவித்து வந்தோம். நாங்கள் மேலசாலை ஜமாத்தில் ஒத்துக்கொண்ட படி 1 முதல் 6 ஐட்ட சொத்து 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் மற்ற சொத்துக்களை நானும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் பிரித்துக்கொள்வதில் 4ம் பிரதிவாதிக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல. அதுபோல் 1 முதல் 6 ஐட்ட சொத்துக்களை 4ம் பிரதிவாதிக்கு கொடுப்பதாக எந்த பஞ்சாயத்தும் நடைபெறவில்லை. (வாதி தரப்பு வழக்கறிஞர் பஞ்சாயத்து பற்றி 4ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றும் எனவே மேற்படி கேள்விக்கு ஆட்சேபணை தெரிவித்தார் ஆட்சேபணை பதிவு செய்யப்படுகிறது) மேலச்சாலை ஜமாத்தில் நடந்த பஞ்சாயத்தை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

A. ஹ. ஜலஹராநாச்சியா.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு; அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

20/2/25
மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

20/2/25